

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, தலைமையில் தீரன் சின்னமலையின் 221–வது நினைவு நாளையொட்டி அரசு போக்குவரத்து கழக அலுவலக வளாகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிகழ்வில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், எம்.எல். ஏ. கதிரவன், பொருளாளர் துரைராஜ், தொ.மு.ச. அமைப்பாளர் குணசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் விஜயா ஜெயராஜ், மோகன்தாஸ், ராமதாஸ், புஷ்பராஜ், கலைச்செல்வி, பவுல்ராஜ் , மூவேந்திரன் பந்தல் ராமு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 அ வட்ட கழகத்தில், வி.பி.ராமன் சாலை, வி.எம்.தெரு, சந்திப்பில். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆர்.என்.துரை ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்திய பிறகு கிரிக்கெட் விளையாடும் இளைஞர்களுக்கு தேவையான உபகரணங்களை மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு வழங்கினார். உடன், லைனர்.கே.பிரபு, வி.எஸ்.கலை, வி.விஜய், ஆர்.அசோக், எஸ்.சித்தரா, வே.சவுந்தர், கே.ரவி,ச.ரமேஷ், ஆர்.ராதாகிருஷ்ண், ஆ.காமாட்சி, டி.செபாஸ்டின், மு.அசோக், கு.சதீஷ், சி.மீனா, க.கற்பகம், மற்றும் கழக உடன்பிறப்புகள் உள்ளனர்.

### காளிங்கராயன் – கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு

# பவானிசாகர் அணையிலிருந்து உடனே தண்ணீர் திறந்து விடுக!

## தலைமைச் செயலாளருக்கு - ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடிதம்!

ஈரோடு, ஆக. 8-

ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, போர்க்கால அடிப்படையில் காலிங்கராயன் வாய்க்கால் மற்றும் லோயர் பவானி (LBP) நீர்ப்பாசனத்திற்காக உடனடியாக நீரைத் திறந்துவிடக் கோரி ஈரோடு தொகுதி மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருக்கு அவசரக் கடிதம் அனுப்பியுள்ளார்.



கழகத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கூறியிருப்பதாவது:-

ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் விவசாயம் பெருமளவில் பவானிசாகர் அணை பாசன நீரைச் சார்ந்துள்ளது. காலிங்கராயன் வாய்க்கால் மூலம் 15,743 ஏக்கர் விவசாய நிலங்களும், லோயர் பவானி (Lower Bhavani Project LBP) திட்டத்தின் மூலம் சுமார் 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெற்று வருகின்றன. இதன் மூலம் மொத்தம் சுமார் 2.23 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் இந்த இரு நீர்ப்பாசனத் திட்டங்களையே நம்பியுள்ளன.

இந்தப் பகுதிகளில் தென்னை, மஞ்சள், கரும்பு, வாழை உள்ளிட்ட முக்கியப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரம், உரிய நேரத்தில் பாசன நீர் கிடைப்பதை நேரடியாகச் சார்ந்துள்ளது.

வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் காலிங்கராயன் வாய்க்காலுக்கு ஜூன் 16 ஆம் தேதியும், லோயர் பவானி (LBP) ஆகஸ்ட் 15 ஆம் தேதியும் பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, அவர்களின் அவசர நீர்ப்பாசனத் தேவையைக் கருத்தில் கொண்டு அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பின் அடிப்படையில், வழக்கமாக ஆகஸ்ட் 15ஆம் தேதி திறக்கப்படும் லோயர் பவானி (LBP) பாசன நீர் முன்கூட்டியே ஜூலை 31 ஆம் தேதியும் காளிங்கராயன் பாசன நீரும் திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் சுமார் 2.23 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் பாதுகாக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரமும் காக்கப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு, காலிங்கராயன் வாய்க்காலுக்கான வழக்கமான நீர் திறப்பு நாளைக் கடந்தும், தாமதமாகி வருவதும் லோயர் பவானி (LBP) பாசன நீர் திறப்பு ஆகஸ்ட் 15 கேள்விக்குறியாக இருப்பதால் மொத்தம் சுமார் 2.23 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தென்னை, மஞ்சள், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரமும் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது.

கடந்த ஆட்சி காலத்தில் அணையின் நீர்மட்டம் 38 அடியாக இருந்தபோது கூட தண்ணீர் திறக்கப்பட்டது என்பது வரலாறு.

எனவே, ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட விவசாயிகளின் நலன், அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மாநிலத்தின் வேளாண் உற்பத்தியைப் பாதுகாக்கும் உயரிய நோக்கில், போர்க்கால அடிப்படையில் காலிங்கராயன் வாய்க்கால் மற்றும் லோயர் பவானி (LBP) நீர்ப்பாசனத்திற்காக உடனடியாக தண்ணீரை திறந்துவிட சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கி, தேவையான நடவடிக்கைகளை விரைந்து கீழ்பவானி மற்றும் காளிங்கராயன் பாசனத்திற்கு பவானிசாகர் அணையை திறக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### மேற்காசியப் போரினால் எரிபொருள் விலை உயர்வதைத் தடுக்க,

# ஒன்றிய அரசிடம் முன்முயற்சிகள் ஏதேனும் உள்ளதா?

## மாநிலங்களவையில் - எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 8 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் 4 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் மேற்காசியப் போரின் விளைவாக, பெட்ரோல் டீசல் விலை உயர்வினை தடுக்கும் வகையில் ஒன்றிய அரசு, ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் எரி பொருள் சந்தைகளை பாதுகாக்க ஒன்றிய அரசின் முயற்சிகள் என்னென்ன? என்றும் ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றியஅரசின் நிதித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்தபதில் பின் வருமாறு:



மேற்காசிய போரின் விளைவாக தொடர்ந்து உயர்ந்து வரும், பெட்ரோல் மற்றும் டீசல் விலையேற்றத்தை தடுக்கும் வகையிலும், பயனீட்டாளர்களை பாதுகாக்கும் வகையிலும், கடந்த மார்ச் 2026 முதல் ஒன்றிய அரசு ஒரு லிட்டருக்கு 10 ரூபாய் என்ற அளவுக்கு உற்பத்தி வரியை குறைத்துள்ளது என்றும், இதனால் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்பட இருந்த இழப்பு ஓரளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது என்றும், நிதிநிலைச் சுமையிலிருந்து இந்தியப் பொருளாதாரம் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும், உலகச் சந்தையின் விலையேற்றத் தின் தாக்கம் ஓரளவிற்கு சமாளிக்கப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஏப்ரல் 2026 நிலவரப்படி ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 138 அமெரிக்க டாலர்கள் என்ற அளவிற்கு விலையேற் றத்தை கண்டுள்ளது என்றும், ஒன்றிய அரசின் பல்வேறு முயற்சிகளால் கச்சா எண்ணெய் பணவீக்கத்தின் அளவு நான்கு சதவீதம் அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும், கச்சா எண்ணெய் விலையேற்றம் உலக சந்தைப் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும் என்பதால், இந்தியப் பொருளாதார சுமையை நீக்கும் வகையிலும், பயனீட்டாளர்களை பாதுகாக்கும் வகையிலும் ஒன்றிய அரசு தேவையான நிதிக் கொள்கைகளை அவ்வப்போது மாற்றிமைத்து மேற்காசிப் போரின் தாக்கம், தனிமனித நிதிச் சுமையை பாதுகாக்கும் வகையில் பல்வேறு முடிவுகளை எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி பதில் அளித்துள்ளார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 வது நினைவு நாளை முன்னிட்டு கவரைப்பேட்டை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கலைஞர் திருஉருவ படத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் கி.வேணுஆனந்த், டி.மஸ்தான், என்.எஸ்.மூர்த்தி, கே.ஜி.நமச்சிவாயம், புருஷோத்தமன், கே.எஸ்.குமார், மோ. பிரசாத், எம்.அருள், ப.சுரேஷ், க.பரத்குமார், கே.வி.ரவி, பா.ஆனந்தராஜ், எழிலரசன், க.அரிபாபு, சரத்குமார், சந்திரமௌலி, வேலு, பாலாஜி, மோகன், பிரபாகரன், ராமு, கரடி சேகர், எத்திராஜ், எஸ்.சிவா, உதயா உள்ளிட்ட நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

### வெளிநாடுகளில் மருத்துவம் படித்த இந்திய மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் வகையில்

# எப்.எம்.ஜி.இ. தேர்வு முறை மாற்றத்திற்கு ஒன்றிய அரசு உடனடியாக தலையிட வேண்டும்!

## சுகாதாரத்துறை அமைச்சர் நட்டாவை நேரில் சந்தித்து தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கோரிக்கை!

புதுடெல்லி, ஆக.8

வெளிநாடுகளில் மருத்துவம் படித்த இந்திய மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் வகையில் FMGE தேர்வு முறை உள்ளது. இவற்றைத் தடுக்க ஒன்றிய அரசு உடனடியாக தலையிட வேண்டுமென சுகாதாரத் துறை அமைச்சர் நட்டாவை நேரில் சந்தித்து தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.



சென்னை தெற்கு மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், வெளிநாடுகளில் மருத்துவம் படித்த இந்திய மாணவர்கள் எழுதும் Foreign Medical Graduate Examination (FMGE) தேர்வில் திடீரென செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி. நட்டாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தை டெல்லியில் ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டாவை நேரில் சந்தித்து வழங்கினார்

அந்த சந்திப்பின் போது, அடிப்படை மருத்துவத் தகுதியை மதிப்பிடும் உரிமத் தேர்வாக இருக்க வேண்டிய FMGE, தற்போது NEETPG மற்றும் INICET போன்ற முதுநிலை நுழைவுத் தேர்வுகளுக்கு இணையான கடினத் தன்மையுடன் நடத்தப்பட்டுள்ளது. இதனால், வெளிநாடுகளில் மருத்துவம் பயின்ற இந்திய மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், முன்கூட்டிய அறிவிப்பின்றி தேர்வு முறை மாற்றப்பட்டதாகவும், நீளமான Casebased Clinical Questions, Xray, CT Scan உள்ளிட்ட பட அடிப்படையிலான கேள்விகள் மற்றும் புதிய வினாத்தாள் அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் ஒன்றிய அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டம் அல்லது தேர்வு வரைமுறை எதுவும் வெளியிடப்படாத நிலையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

சமீபத்திய FMGE தேர்வில் தேர்ச்சி விகிதம் வெறும் 12 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும், தேர்வு எழுதிய சுமார் 36,000 பேரில் 32,000 பேர் தோல்வியடைந்துள்ளதாகவும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி குறிப்பிட்டுள்ளார். போட்டித் தேர்வாக இல்லாத உரிமத் தேர்வில் 88 சதவீத தோல்வி விகிதம் இருப்பது, தற்போதைய மதிப்பீட்டு முறை அடிப்படையிலேயே தவறானது என்பதை காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், தேர்வுக்கு 6,000 முதல் 7,000 வரை கட்டணம் வசூலித்தும், அதிகாரப்பூர்வ Answer Key, Response Sheet ஆகியவை வெளியிடப்படவில்லை என்றும், Re checking அல்லது Reevaluation செய்யவும் வாய்ப்பு வழங்கப்படவில்லை

எனவே,

(1) அதிகாரப்பூர்வ விடைக்குறிப்பை கட்டாயமாக வெளியிட வேண்டும்,

(2) மாணவர்களின் புகார்களை விசாரிக்க தனித்துவமான Grievance Mechanism அமைக்க வேண்டும்,

(3) தேர்வு முறையில் மாற்றங்கள் செய்யப்படுமானால், குறைந்தது ஒரு வருடத்திற்கு முன்பே அறிவிக்க வேண்டும்,

(4) அதற்கேற்ற மாதிரி வினாத்தாள்களையும் வெளியிட வேண்டும்,

என ஒன்றிய அமைச்சரிடம் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில், வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளின் எதிர்காலத்தை பாதுகாக்க ஒன்றிய அரசு உதவியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. சஞ்சீவிராயன்

**ஆகஸ்ட் 8 (2021)**



**1964ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி 55 ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாவட்டத்தில் எழும்பூர் மற்றும் திரு.வி.க.நகர் பகுதிகளில் 68வது வட்டம், 97வது வட்டம் ஆகிய வட்டச் செயலாளராகவும் மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**